Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 6, No.2, 2025, (81-97)

# பாரதியாரின் கவிதைகளில் காணப்படும் பெண்ணியமும் ஆன்மிகச் சிந்தனைகளும்

## Feminism and Spiritual Thoughts in Bharathiyar's Poetry

**Pravindraaj Arumugam**

Faculty of Human Sciences, Sultan Idris Education University,
35900 Tanjong Malim, Perak, Malaysia

email: Pravindr75@gmail.com

**Corresponding author: Pravindraaj Arumugam*

**Received:** 29 Sept. 2025; **Revised:** 30 Nov 2025; **Accepted:** 08 Dec 2025; **Published:** 30 Dec 2025

**To cite this article (APA):** Pravindraaj, A. (2025). பாரதியாரின் கவிதைகளில் காணப்படும் பெண்ணியமும் ஆன்மிகச் சிந்தனைகளும்: Feminism and Spiritual Thoughts in Bharathiyar's Poetry. Journal of Valartamil, 6(2), 81-97. https://doi.org/10.37134/jvt.vol6.2.9.2025

**ஆய்வுச்சாரம்:** வான்புகழ் வள்ளுவன், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் யாத்த இளங்கோ, இராமகாதை பாடிய கவிச்சக்கரவர்த்தி கம்பன் போன்ற புலவர்களுக்குப் பின்னர் தமது பாட்டுத் திறத்தாலும் கவிதை எழுதும் தனித்துவத்தாலும் இந்தத் தரணியை நன்மிகு வகையில் பாலித்தப் பெருமை மகாகவி பாரதியாருக்கே சாரும். எட்டயப்புரத்திலே பிறந்து வளர்ந்த பாரதி தமது கவிதைத் திறத்தின் உச்சத்தால் உலகையே தனதாக்கிக் கொண்டார் என்று கூறுவதைவிட உலகம் முழுவதும் பாரதியைத் தான் தனதாக்கிக் கொண்டது என்று கூறுவது மிகப் பொருந்தும் என்பது மறுபதற்கில்லை. பாரதியார் கவிதையில் கையாளும் கற்பனையாற்றல் சாதாரணமல்ல. இவர் புனையும் ஒவ்வொரு கவிதையும் கற்பனை உச்சியில் மலர்ந்து உவமையும், உருவகமும், உருகாட்சியும் பின்னணியாகக் கொண்டு சமூகவியலும் தனிமனிதனின் உள்ளார்ந்த அனுபவம் நிறைந்த குறியீடு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. இதுவே அவரின் படைப்புகளைக் கவின் பெறச் செய்கின்றன. அவ்வகையில், பாரதியாரின் கவிதைகளில் காணப்படும் சமூகவியலும் தனிமனிதனின் உள்ளார்ந்த அனுபவம் எனும் இரு கருப்பொருளில் மூலம் ஊற்றெடுக்கும் பெண்ணியம் மற்றும் ஆன்மிகத்துவச் சிந்தனையை விளக்குவதே இவ்வாய்வின் சீரிய நோக்கமாகும். இவ்வாய்வு பண்புசார் ஆய்வாக வடிவமைக்கப்பட்டு நூலக அணுகுமுறையின் கீழ் பாரதியார் கவிதைகள் தொடர்பான பல தரவுகள் சேகரிக்கப்பட்டு எழுதப்படுள்ளது. இவ்விரு சிந்தனைகளுக்கு உட்படுத்திப் புனையப்பட்ட கவிதைகள் யாவும் மெய்மையான சமுதாய நிலையினை

வெளிக்கொணரும் பாங்கில் மலர்ந்துள்ளன. பாரதியாரின் கவிதைகளில் காணப்படும் பெண்ணியமும் ஆன்மிகத்துவச் சிந்தனையானது மானுட வாழ்வின் மேம்பாட்டிற்கு வழித்துணையாக அமைந்துள்ளதை இவ்வாய்வின் முடிவின் வாயிலாக அறுதியிட்டுக் கூறலாம்.

***கருச்சொற்கள்*** **:** பாரதியார், சமூகவியல், தனிமனிதனின் உள்ளார்ந்த அனுபவம், பெண்ணியம், ஆன்மிகம்

**Abstract:** The great poet Bharathi deserves the distinction of enhancing this world with his lyrical genius and singular skill for writing, following in the footsteps of the great Valluvar, Ilango, who wrote the heart-stirring *Silappathikaram*, and Kamban, the emperor of poets, who sang the *Ramayana*. During the height of his poetic brilliance, Bharathi, who was born and reared in Ettayapuram, did more than just claim the globe as his own; it would be more accurate to say that the world as a whole claimed Bharathi as its own. The power of imagination used in his poetry is extraordinary. Each poem he composed blossoms at the heights of imagination, interwoven with similes, metaphors, and vivid imagery, and is deeply rooted in both social thoughts and the inner experiences of the individual. These qualities are main reason to make beauty to his works. Given this, the aim of this research is to investigate the two main themes that emerge from his poetry: spirituality and feminism, both of which are based on social philosophy and the interior experiences of the self. This study was designed as qualitative research and under the textual approach, various data related to Bharathiyar's poems were collected and written. Poems written in these two levels blossom in a way that reveals society as it really is. It is undeniable that the spiritual ideas and feminism found in Bharathi's poetry have acted as catalysts for the advancement of humankind. This study uses the library research approach and is structured as a qualitative literary inquiry.

**Keywords:** Bharathi, social thoughts, inner experiences of the individual, feminism, spiritual ideas

## முன்னுரை

தமிழ்க்கூறும் நல்லுலகத்தில் விளைந்த இலக்கிய வளர்ச்சிக்கும் அறியாமை எனும் இருளில் உள்ள குமுகாயம் நலம்பெறவும் எண்ணற்ற கருத்துகளை வழங்கும் பெட்டகங்கள் தனிமனிதன் சிந்தனையில் ஊடுருவம் காண்பதற்கும் பாடுப்பட்ட கவிஞர்களுள் முதன்மை மிக்குத் திகழ்பவர் பாரதி ஆவார். பாரதியின் கவிதையின் ஆளுமை தமிழ்ச் சமுகத்தின் இதயங்களில் இன்றளவும் பின்னிப்பிணைந்து கொண்டிருக்கிறது என்பது திண்ணம். பாரதியாரின் படைப்புகள் அனைத்தும் அவர் கண்ட சமூகத்தையும் அவர்காண விரும்பிய சமூகத்தையும் யதார்த்தமாகவும் மெய்யியல் நடையின் மூலம் மக்களுக்கு வெளிச்சம் காட்டுகிறார். நாட்டு மக்களின் நல்வாழ்க்கையை முதன்மையாகக் கருதி, கவிதை எழுதும் திறத்தின் மூலம் அவர் அடியெடுத்து வைக்கும் ஒவ்வொரு போராட்டத்திலும் வெறும் மூன்றாவது மனிதராக நின்றிராமல், அந்தப் போராட்டக்களத்தில் தானும் கைகொடுத்துப் பங்கு தருபவராகவும் விளங்கியுள்ளார் என்பது மெய்.

Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 6, No.2, 2025, (81-97)

இதனால், அடிமட்டத்தின் விளிம்பின் பிடியில் இருக்கும் சமுகத்தின் அறிவு, செயல், நடத்தை ஆகியவற்றின் மேன்மைக்கும் வளர்சிக்கும் பாடுப்பட்ட தலைமகன் பாரதியாருக்குப் புதுமைக் கவி, புரட்சிக் கவி, தேசிய கவி , மறுமலர்ச்சிக் கவி, மக்கள் கவி என்ற அழகொழுகும் வகையில் நற்பெயர்கள் அவரைத் தேடி வந்தன. (இளமதி சானகிராமன், 2004). அத்தகைய தக்கோர் போற்றும் வகையில் ஒப்புயர்வற்ற இவரின் கவிதைகளில் பொதிந்துள்ள பெண்ணியமும் ஆன்மிகத்துவச் சிந்தனைகளைப் பகுத்து ஆய்தலின் மூலம் அவர்காண விரும்பும் பெண் சமுதாயத்தின் மீதான பார்வையும் இறையருளோடு இயைந்த தனிமனிதனின் உள்ளார்ந்த அனுபவத்தின் எதிர்பார்ப்புகளையும் கண்டறிய முடியும். இக்கால யதார்த்தத்துடன் பொருந்தி வாழும் சமூகத்தினரின் தற்கால சூழல்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பது மேலும் ஆக்கக்கரமானதாக அமையும்.

## ஆய்வு நோக்கம்

1. பாரதியார் கவிதைகளில் காணப்படும் பெண்ணியச் சிந்தனைகளைத் தற்காலச் சூழலோடு விளக்குதல்

2. பாரதியார் கவிதைகளில் காணப்படும் ஆன்மிகச் சிந்தனைகளைத் தற்காலச் சூழலோடு விளக்குதல்

## ஆய்வு எல்லை / ஆய்வு அணுகுமுறை

இந்த ஆய்வானது நூலாய்வு அணுகுமுறையைக் கையாண்டு பண்புசார் ஆய்வாக வடிவமைக்கப்பட்டு தக்க ரீதியான சான்றுகளுடன் எழுதப்பட்டுள்ளது. தலைப்புக்குத் தொடர்பான கருத்துகளை ஏடலாக்கத்துடன் அவதானித்தலும், சான்றுகளுடன் விவரித்தாலும் பல்வேறுபட்ட மூலகங்களில் இருந்து தரவு சேகரித்தலும் ஆகியவை இவ்வாய்வின் பிரதான முறையியல் கருவிகளாகும். பாரதியார் கவிதைகளில் காணப்படும் பெண்ணியமும் ஆன்மிகச் சிந்தனைகளோடு தொடர்புடைய ஏனைய மூலங்களில் காணப்படும் தரவுகள் இந்த ஆய்வில் இணைத்துக் கொள்ளப்பட்டன. நூல்கள், தலைப்புக் தொடர்பான பிந்தைய ஆய்வேடுகள், கட்டுரைகள் ஆகியவை இவ்வாய்வின் மூலப்பொருட்களாகக் கருதப்படுகின்றன. இவ்வாய்வின் எல்லையாக 2018-ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்ட பாரதியின் நீதிநூல்களில் வாழ்வியல் விழுமியங்கள் எனும் நூல் அமைந்துள்ளது.

## பாரதியார் கவிதைகளில் காணப்படும் பெண்ணியச் சிந்தனைகள்

பெண்ணியம் என்பது பெண்ணின் சமூக தற்கால நிலையினை மறுமலர்ச்சிக்கு உட்படுத்த வேண்டிய தேவையை வலியுறுத்துகின்றது. அவ்வகையில், வாழ்வியலில் பாலின பாகுபாடு தொடர்பான சமூகப்பண்பாடு வேர்களை இனங்கண்டு அதனை முறியடிக்கவும், குறிப்பாக பெண்களுக்கு எதிராக இழைக்கும் அடக்குமுறை, அநீதி, ஆணாதிக்கக் கொள்கை ஆகியவற்றை எதிர்க்கவும் என்பதற்காகத் தமிழ்க் கவிதையுலகில் ஒரு தனிமனிதனாக நின்று தனது கவின் திறத்தால் பெண்களின் நிலைத்தன்மையான வாழ்விற்கு அடித்தளமாக இருந்தவர் மகாகவி பாரதியார் எனலாம். *'செருப்புக்குத் தோல்வேண்டியே, இங்குக் கொல்வாரோ செல்வக் குழந்தைதன்னை'* எனும் வரிகளின் மூலம் பெண்ணுரிமை வேண்டும் என்ற பிடியான நோக்கில் பெண்ணியம் சார்ந்து கரிசனத்துடனும் பரிவுணர்வுடனும் கவிதைப் புனைந்தவர் பாரதி எனலாம்.(ப.கல்பனா, 2020) பரந்துபட்ட சமூகநலன் கருத்தில் கொண்டு பல்வேறு பெண்ணியச் சார்ந்த கருத்துகளை ஊடாட்டமாகவும் போராட்டமாகவும் கவிதை மூலம் வெளிக்கொணர்ந்து ஆணுக்கு நிகரான பெண்ணுக்கும் சமயுரிமையை நிலைநாட்டினர்.

மரபு சார்ந்த கருத்தாக்கங்களை மறுதலித்து, மரபின் செழுமைகளை உள்வாங்கிக்கொண்டு, மாறும் சமுகத்திற்கேற்ற புதுமைகளைப் பெண்ணினத்திற்கு உட்செறித்துத் தனது கவிதைப் படைப்புகளின் மூலம் தழைக்கச் செய்துள்ளார். பாரதியாரின் ஆக்கப்பூர்வமான ஆக்கங்களில் குறிப்பாகக் கவிதைகளில், பெண்ணியம் சார்ந்த கருத்தமைப்புகள் புரட்சிகரமாகவும் பரிவுடனும் கூடிய பல சித்திரங்களாகக் காணப்படுகின்றன.(கே.செல்லப்பன்,1984). இவற்றில் 'பெண்' சார்ந்த தாழ்வுப் புனைவுகளைக் கட்டுடைத்துப் பெண்ணியச் சிந்தனையைத் தனது படைப்பாற்றலில் ஊற்றாகக் கொண்டு ஆண்களுக்கு இணையான சரிநிகர் சமானத் தத்துவத்தை இவ்வாழ்வியல் நடைமுறையில் பெறப் போராடுபவராகத் திகழ்கிறார் பாரதி. அவ்வகையில், *'ஞானம் வீரம் சுதந்திரம் நல்லறம்'* எனும் கருத்தினை மையமாகக் கொண்டுப் பெண்ணினத்திற்காகப் 'பெண் விடுதலை', 'பெண் கல்வி', 'வீரப் பெண்' 'சரிநிகர் சமானம்' ஆகியவற்றைத் தனது கவிதைகளில் இன்றளவும் நிலைபெறச் செய்துப் பாரதி காணவிரும்பும் புதுமைப்பெண்ணைத் தமிழர்களிடையே உருவாக்கினார்.

### *பெண் விடுதலை*

பாரதியாரின் கவிதைகளைப் பெண்ணியத் திறனாய்வின் அடிப்படையில் ஆராய்ந்தோமானால் பெண் விடுதலைக்காக இவர் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் துணிந்து குரல் எழுப்பியுள்ளார் எனலாம். அவருடைய கவிதைகளில்

பெரும்பாலானவை பெண் விடுதலை உணர்வை மையமாகக் கொண்டே அன்றைய காலத்தில் புனையப்பட்டது குன்றின் மேலிட்ட விளக்காயிற்றே. பெண்ணியக் கோட்பாட்டினைத் தலைத்தாங்கிக் கொண்டிருக்கும் அவரது கவிதைகளில் பெண்ணைப் பற்றிய பல்வேறு பரிமாணத்தில் புதுமை சிந்தனைகளையும், பெண் அடிமைத்தனத்தைக் கடிந்து எதிர்க்கும் புரட்சிக்கரமான பெண் சார்புத் துணிவு குரலையும் தெளிவாகக் காணலாம். (ந.சுப்புரெட்டியார்,1983). பெண்களுக்குச் சொத்துரிமை, மணத்தேர்வு, சுய முடிவெடுப்பதில் சுதந்திர இல்லாமையும் வெறும் பெண்களைப் பகடைக் காயாகப் பார்க்கும் கோலோச்சிய காலத்தில் வாழ்ந்த பாரதி இவற்றையெல்லாம் கண்டு நெஞ்சம் பொறுக்காமலும் வருத்தத்தினாலும் பெண்ணுரிமைக்காக விடுதலையுணர்வும் சுயசிந்தனையும் வலிமையுடன் தமது கவிதைகளில் பதிவுச் செய்கிறார். அன்றைய காலத்தில் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதியாகப் பெண் விடுதலையைப் பாரதியார் தமது அறிவு பெட்டகத்தில் புகுத்தி அவற்றை இரண்டினையும் தொடர்புடைய பிரிக்கவியலாத ஓர் உடன் நிகழ்வாகவே கண்டார் எனலாம்.

பாரதியாரைப் பொறுத்தவரைப் பெண்ணுக்கு எப்போது அடிமைப்பிடியிலிருந்து விளங்கி சுதந்திர வாழ்கையை இன்புற வாழ்கிறார்களோ அப்பொழுதுதான் நாட்டிற்கு உண்மையான சுதந்திரம் கிடைத்த உன்னத பொருளைக் குறிக்கும் என்கிறார். பாரதியார் காலத்தில் பெரும்பாலான பெண்கள் அடிமையான வாழ்வின் பிடியில் சிக்கி அவல நிலைக்குத் தள்ளப்பட்டனர். முந்தையத் தமிழர் பண்பாடு நெறிவாழ்வியலில் பெண்களைக் குறைவாகப் மதிப்பிடாமல் அவர்களுக்குச் சுதந்திர உணர்வை வழங்கி போற்றி வாழ்ந்தனர். ஆனால், தமிழ் மரபிலக்கியத்தில் ‘இல்லாள்’ எனப்படும் ‘இல்லம் காப்பவள்’ என்றெல்லாம் பெருமையுறப் புகழபட்டப் பெண்கள்தான் இடைக்காலத்தில் வேற்று நாட்டவரின் வரவின் தாக்கத்தினாலும் சில பொய்மைச் சமயங்களின் கூற்றினாலும் பின்னுக்குத் தள்ளப்பட்டுச் சுதந்திரம் எனப்படும் உணர்வை அடியோடு இழந்தனர். (சி.பாலசுப்பிரமணியன்,1983). பெண்கள் தங்களின் மனதில் பலகாலமாகப் பூட்டிவைத்தப் பல கால சுய உணர்வுகளை வெளிக்கொணர முடியாமல் இழ்நிலை வாழ்க்கையான அடிமைத்தன சூழலிற்கு உட்படுத்தப்பட்டுத் துன்பப்பட்டனர். துன்பக் கடலில் மீண்டெழ முடியாமல் தவிக்கும் பெண்களைக் கண்டு வெகுண்ட பாரதி, பெண்களுக்கு விடுதலை இல்லையென்றால் இந்நாட்டிற்கே விடுதலை இல்லை எனத் தமது கவிதை வரிகளின் மூலம் பதிவுச்செய்துள்ளார்.

“பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் – நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்” - **( முரசுப்பாடல்)**

பெண் வாழ்வுக்கான இயல்பான உரிமைகளையும் விடுதலையுணர்வையும் அடியோடு அழிக்க நினைக்கும் ஆணாதிக்கச் சமுகமே பெண்ணடிமைத்தனத்திற்கு முக்கியக் காரணம் என்று கூடச் சொல்லாம். (சுப்பிரமணிய பாரதியார், 1941). காரணம், விடுதலைப் போராட்டக் காலத்தில் பெரும்பான்மையான ஆண் வர்க்கத்தினர்கள் மட்டுமே வெளியே சென்று ஆங்கிலேயரைப் புரட்சிக்கரமாக எதிர்த்துப் போராடினர். ஆனால், பெண்களோ சுதந்திரமாக உலாவ முடியாமல் வீட்டிற்குள்ளே கிணற்று தவளையைப் போல் முடங்கிக் கிடந்தனர். இத்தகைய பெண்ணின் அடிமை நிலையினைக் கண்டு பாரதியாரும் ,

“மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னி லெந்த
வகையிலும் நமக்குள்ளெ
தாத ரென்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வ மிந்த நாட்டிலே! - **(விடுதலை)**

எனும் விடுதலைப்பாட்டில் மூலம் பெண்களிடையே விடுதலையுணர்வை மிளிரச் செய்கிறார். தூங்கிக் கிடந்த பாரதத்தை அவருடைய கவின் திறத்தால் இப்பாடலின் மூலம் தட்டியெழுப்பி பெண்ணுக்கு நிகழும் பெண்ணடிமையை அடியோடு ஒடுக்கி, ஆணும் பெண்ணும் சமமாக வாழவேண்டும் என்ற கருத்தோட்டத்தைச் சமுதாயத்தில் பதிய வைக்கிறார். (ந.சுப்புரெட்டியார்,1990). அதுமட்டுமின்றி, பாரதி விடுதலையுணர்வை மையமாக வைத்துக்கூட பாடும்போது ஆணும் பெண்ணும் சமநிகராகச் சமுகத்தில் விடுதலைப் பெற்றிருக்க வேண்டும் என்பதனை , *“காட்டிலுள்ள பறவைகள் போல் வாழ்வோ மம்மா”* எனும் வரியின் மூலம் வெளிபடுத்துகிறார். அதாவது, பெண் வர்க்கத்தினர் அடிமைச்சங்கிலியின் பிடியிலிருந்து மீண்டு பறவைகளைப் போன்று தடைகளற்றுச் சுதந்திரமாகச் சுற்றித் திரிய வேண்டும் எனும் நோக்கில் கவிதை வாயிலாக அவரின் விருப்பத்தை உவமைப் பாணியில் கொண்டுவருகிறார்.

பாரதியார் விரும்பும் பெண் சுதந்திரமானது புதுமைப்பெண் வடிவிலான உருவத்தின் மூலம் கண்டு அவற்றின் பெண்ணியக் கொள்கைகளை நம்மால் அறிய முடிகின்றது. (தி.சுமதி,2018). பெண்களின் வாழிவியலில் விடுதலை எண்ணம் ஓங்க காலங்காலமாகப் பின்பற்றி வரும் பண்பாட்டு விலங்குகளை மறுதலித்துப் பெண்ணுக்கும் ஆணுக்கு நிகரான சுதந்திர சிந்தனையைத் தமது படைப்புகளில் புதிய நெறியாகப் பயன்படுத்தி கற்பனையில் உவகையான புதுமைப்பெண்ணுக்குப் பாரதி அணிவிக்கிறார் எனலாம்.

“நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்;

ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்கடிப் பெண்ணின் குணங்களாம்;
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டிரோ!”

**- (புதுமைப்பெண் , பக். 355)**

பெண்களின் எண்ணத்தில் சுதந்திரம் ஆழ்மனது வரை ஊடுருவ இப்புதுமைப்பெண் எனப்படும் அற்புதமான கவிதையை இவ்வுலகில் உயிர்பெறச் செய்தார். பாரதியார் பொறுத்தமாட்டில் பெண்களிடையே பிறவியிலிருந்து இருக்கும் தேவையற்ற பயம், கூச்சம், தயக்கம் ஆகியவற்றை அவர்களின் சுதந்திரம் அடையும் வேட்கையினை முற்றிலும் அழித்துவிடுகின்றன. இத்தகைய அடிமைக் குணத்தை நீக்கி சுதந்திரப் பேரிகையாக விளங்கும் பாரதியாரின் புதுமைப்பெண்ணானவள் எதிர்வரும் தீயக் காரியங்களைத் துணிவுடன் எதிர்த்து நிற்கும் மனப்பக்குவத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்பதனை அவர் வலியுறுத்துகிறார்.(ச.நா.கணேசன், 1998). அறிவு, அறம், விரம் எனும் மூன்று நற்குணங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் புதுமைப்பெண்ணால் மட்டுமே பெண் சுதந்திரம் உலகளாவிய நிலையில் மேன்மைப் பெறும் என்பதை இக்கவிதையின் மூலம் எடுத்துக்காட்டுகிறார். பாரதியார் வாழ்ந்த காலக்கட்டத்தில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அடக்குமுறைகளை எதிர்க்கும் வகையில் ,

“அறிவு கொண்ட மனித வுயிர்களை
அடிமையாக்க முயல்பவர் பித்தராம்;
நெறிகள் யாவினும் மேம்பட்டு மானிடர்
நேர்மை கொண்டுயர் தேவர்க ளாதற்கே,
சிறிய தொண்டுகள் தீர்த்தடி மைச்சுருள்
தீயிலிட்டுப் பொசுக்கிட வேண்டுமாம்”

**- (புதுமைப்பெண் , பக். 354)**

என்று பெண்களை உட்பட ஆறறிவு கொண்ட மனிதர்களை அடகுவர்களைப் பித்தர்கள் என்று பழிப்பதும் அடிமைச்சுருள்களைத் நெருப்பில் போட்டுப் பொசுக்கத் தூண்டுவதும், போன்ற வன்மையான கண்டிப்புகளைப் பாரதி போற்றும் புதுமைப்பெண்ணின் விடுதலையுணர்வை எழுப்பும் குரல்களாக இக்கவிதை வரியில் ஒலிக்கிறது. அதனைத் தவிர்த்து, பாரதியார் ‘பெண்கள் விடுதலை கும்மி’ எனும் கவிதைப்பாடலின் வாயிலாக பெண் விடுதலைச் சிந்தனையைக் ‘கும்மியடித்தல்’ எனப்படும் பாரம்பரிய விளையாட்டுடன் தொடர்புப்படுத்தி பெண்ணினத்திற்கு உணர்த்துகிறார்.

"கும்மியடி! தமிழ் நாடு முழுதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி!
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி! (கும்மி)
ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்;
வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்
போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்."

- **(பெண்கள் விடுதலை கும்மி)**

பாரதியாரின் ஈடு இணையற்ற கற்பனைத்திறத்தால்தான் இவ்வாறான பெண் விடுதலைச் சார்ந்த படைப்பிலக்கியங்கள் பெண்கள் மனதில் ஆழப் பதியச் செய்து அவர்களிடையே சுதந்திர உணர்வைத் தட்டியெழுப்புகிறது எனலாம். பெண்களிடையே தொன்று தொட்டு நிலவி வரும் அடிமை இருளை நீக்க, பெண்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான கும்மியடித்தலை அவர்களின் மனதில் நிலைநிறுத்தி, பெண்ணடிமை விலங்கொடிக்கக் கும்மியடி என்று இக்கவிதையில் முரசு கொட்டுகிறார். பெண்களின் விடுதலையை மையக் கருதுக்கோளாகக் கொண்டிருக்கும் இக்கவிதைப்பாடலின் மூலம் பெண்கள் சமூக நடப்பியல் வாழ்வினில் எப்படி இருக்கிறார்கள், அவர்கள் எத்தகைய சக்தியினை உள்வாங்கி படைக்கப்பட்டுள்ளனர் என்பதையெல்லாம் பெண்ணியக் கோட்பாட்டினைத் தழுவி சமுதாயத்திற்கு எடுத்துக் கூறுகிறார். சமூகத்தில் பெண்கள் மீதான அடக்குமுறையும் ஒடுக்குமுறையும் ஆகியவற்றை அடியோடு ஒழித்திட வேண்டும் என்ற வேட்கை பாரதியாருக்கு இருந்தமையால் அவர் இக்கவிதையை எழுதியுள்ளார் எனலாம். (தங்கம்மாள் பாரதி,1947). அடிமைப்படுத்தப்படும் பெண்களின் நிலை மாற வேண்டும் என்பதற்காக அவர் பெண் விடுதலையே நாட்டின் விடுதலை எனவும் மானுட விடுதலையின் வேர் பெண் விடுதலை எனப்படும் கருத்தினைத் தமது கவிதை வாயிலாக புரட்சிகரமாக வெளிப்படுத்தினார்.

## *பெண் கல்வி*

பெண் விடுதலையைத் தவிர்த்து மகாகவி பாரதியார் பெண்ணுக்கு வழங்கப்பட வேண்டிய கல்விக்காகத் தமது கவிதையின் மூலம் போராடினர் எனலாம். பெண்கள் சமூகத்தில் நிலைதன்மைமிக்கச் சமநிலையை அடைய அவர்களுக்கு முறையான கல்வியொன்றே ஆயுதக் கோலாக அமையும் என்பதில் பாரதி அசராதத் திடச் சிந்தனை மிக்கவராக உள்ளார் என்பது மறுப்பதற்கில்லை. அவரைப் பொறுத்தவரையில் பெண்கள் சம்பூர்ணமான விடுதலை பெற வேண்டுமாயின் அதற்குக் கல்வித் தோணியே பெரிய அச்சாணியாக அமையும் என்று நம்புகிறார். ஔவையார் பிறந்து வளர்ந்த தமிழ்நாடில் உறையும் பெண்களுக்கு அறிவு சார் கல்வி எளிதாகவே அமையும்

என்று தீராத நம்பிக்கையுடன் உள்ளார் பாரதி. பெண்களிடையே இருக்கும் அறிவு திறத்தைக் கல்வி எனப்படும் திறவுகோலின் மூலமாக நாட்டின் விடுதலைக் கோட்டையைக் கைப்பற்ற முடியும் என்பது இவருடைய திண்ணமான எண்ணம். ஆகவே, கல்வி எனும் தெய்வத்தைப் பெண்ணியக் கோட்பாட்டின் கீழ் அவர் கவித்திறத்தின் மூலமாகப் பாரதி இணைப்பதன் மூலம் பெண்களுக்கு ஏற்படும் அடிமைநிலை வெகுவிரைவில் மாறுப்படும் என்று கருதுகிறார்.

“பெண்ணுக்குள் ஞானத்தை
வைத்தான் புவி பேணி வளர்த்திடும் ஈசன்,
மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல
மாதர் அறிவை கெடுத்தார் ”

- **(முரசுப்பாடல்)**

இக்கவிதை வரிகளின் மூலம் அறிந்து கொள்வது என்னவென்றால் பெண்களுக்கு இயற்கையிலே பொது அறிவும், அனுபவ அறிவும் அதிகமாகவே இருக்கிறது. பெண்களின் அறிவாற்றலை உயர்த்திப் பேசும் பாரதியாரின் இக்கவிதை வரியில் சில ஆண் மூடர்கள் பெண்ணினத்தை அடக்கி அவர்களின் கேள்வி ஞானத்தையும் கல்வி வளர்ச்சியும் மேம்பட அடையாமல் கெடுப்பதாக அவர் சுட்டிக்காட்டுகிறார். ஏட்டையும், எழுதுகோலினையும் தொடுவது பெண் குலத்திற்கு ஆகாது என்ற எண்ணத்தில் மூழ்கியிருக்கும் வர்க்கத்திற்கு எதிராகப் பெண்களின் கல்வி வளர்சிக்காக யாருக்கும் அஞ்சாமால் பாரதி கவிதைப் மூலம் புலப்படுத்தியிருப்பது அவரின் ஞானசெருக்கினைக் குறிக்கிறது. பெண்களின் வாழ்வில் விடுதலை எனும் அங்கம் நிலைபெறவேண்டுமாயின் அதற்கு மூன்று வகையான உபாயங்கள் இருக்கின்றன. முதலாவது உபாயம் கல்வி. அதனைத் தொடர்ந்து இரண்டாவதும் மூன்றாவது உபாயமும் கல்வியே. அதாவது, கல்வியைத் தவிர்த்து வேறு உபாயங்கள் அனைத்தும் பெண்களின் வளர்ச்சிக்குச் சிறிதேனும் பயன்படாது என்பதுதான் பாரதியின் புதைப்பொருள் கருத்தாகும்.(நல்லி குப்புசுவாமி ,1999). ஆகவே, பெண்கள் எப்பொழுது தங்களின் வளர்ச்சியினைக் கல்வி மூலமாக உயர்த்துகிறார்களோ அப்பொழுதுதான் அவர்களின் வாழ்க்கைப் பாதை வெற்றிக்கு நகரும் என்பதனை கீழ்வரும் கவிதை வரிகளின் மூலம் உணர்த்துகிறார்.

“பெண்கள் அறிவை வளர்த்தல் வையம்
பேதமை அற்றிடுங்காணீர்”

**- (முரசுப்பாடல்)**

அதோடு இல்லாமல், பெண்கள் காலங்காலமாகப் பின்பற்றி வரும் மூடநம்பிக்கையினைத் தங்கள் வாழ்வின் அகராதியிலிருந்து தூக்கி எறிந்து பகுத்தறிவாளர்களாகவும் கல்வியில் சிறந்து விளங்கும் உயரிய

சிந்தனைக் கொண்ட மாதராகவும் திகழ வேண்டுமென்று பாரதி பெண்ணினத்திற்குக் கூறுகிறார். பெண்ணியத்தின் சிறப்பியல்புகளை எடுத்துரைக்கும் வகையில் அமைந்த பாரதியின் புதுமைப்பெண்ணானவள் முடநம்பிக்கைகள் நிறைந்த இந்தியத் தமிழ்ச் சேர் மிகுந்த சூழலில் முளைத்த செந்தாமரைப் போல் திகழ்கிறார்.

"சேற்றிலே புதிதாக முளைத்ததோர்
செய்ய தாமரைத் தேமலர் போலொளி
தோற்றி நின்றன பாரத நாட்டிலே "

- **(புதுமைப்பெண், பக். 354)**

பாரதி புதுமைப்பெண்ணைச் சேற்றில் முளைத்த செந்தாமரைக்கு உவமைப் பாணியில் கவிதை எழுதியிருப்பது அவர் சமூகத்தில் நிலவும் பெண்ணடிமைத்தனத்திற்கும் பெண்களுக்குக் கல்வியை மறுக்கும் வர்க்கத்தினருக்கும் நேரடியாகக் கொடுத்த எதிர்ப்பு எதிரொலிக் குரல் என்றுக் கூடச் சொல்லலாம். இதன் மூலம், பாரதியாரின் எதிர்பார்ப்பு என்னவென்றால் பெண் எனப்படும் புதுமையானவள் கல்வி நிலையில் தன்னை உயர்த்திக் கொண்டு , அடிமைப் பிடியிலிருந்து விலகி தான் விரும்பும் தொழிலில் சிறப்புற ஆற்றும் சேவைதனை உரிமையுடன் பெற வேண்டுமென்பதே அவரின் நீண்டக் கால கனவாகும். *'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடந்த வந்தோம்'* என்று கவிதை வரிகளாக எழுதிய பாரதியின் கண்களில் பெண்ணியத்தைப் பிரமிப்போடுப் பார்கும்போது நம்மால் அறிந்து கொள்வது என்னவென்றால் பெண்ணானவள் தம்மை மேம்படுத்தப் பட்டயப் படிப்புகளில் சிறந்து விளங்கியும் அரசியலில் ஈடுபடுத்திக் கொண்டுச் சட்டத்தை நேர்மையான முறையில் உருவாக்கி நாட்டை நன்முறையில் வழிநடத்துவதே அரிது என்று தெரியப்படுத்துகிறார். (மன்னார்குடி பானுகுமார், 2018).

## *வீரப் பெண், சரிநிகர் சமானம்*

தொடர்ந்து, பாரதியாரின் கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைக் கோட்பாட்டின் கீழ் ஆராய்ந்தோமானால் வீரம் எனப்படும் சிறப்பியல்பானது மாதர்களிடையே அவசியமாக இருக்க வேண்டிய பண்பாக அவர் கருதுகிறார். யாவர்க்கும் அஞ்சாமல் நன்னெறி உடைய நிமிர்ந்த ஞானச்செருக்குப் பெற்ற செம்மைக் கொண்ட வீர மாதரைப் படைப்படத்தில் பாரதி முனைப்பாட்டுடன் இருந்தார். இத்தகைய பெண்ணியச் சிந்தனையை உட்படுத்தப்பட்டுள்ள அவரது உன்னத படைப்பாக்கத்தில் ஒன்றான புதுமைப்பெண்ணின் வீர இயல்புகளைப் பின்வரும் கவிதைப் பாடல் வரிகளின் மூலம் அறியலாம்.

"நிமிர்ந்தநன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
*செம்மை மாதர் திறம்புவதில்லையாம்"*

- **(புதுமைப்பெண்,பக் 357)**

பாரதியாரின் கண்ணோட்டத்தில் உருவான வீர புதுமைப்பெண்ணானவள் நாணத்தால் தலைக் குனிந்து நடவாமல் நேர் கொண்ட பார்வையுடனும் பேதமையையும் மூடத்தனத்தையும் பெண்களிடையே கட்டாயப்படுத்தும் வீணர்கள் யாவராயினும் அத்தகையோருக்கு அஞ்சாத வாழ்வியல் நெறிமுறைகளும் தெளிந்த மற்றும் செறிந்த அறிவால் உண்டாகும் செருக்கு உடையோராக பெண்கள் விளங்க வேண்டும் என்பதை இக்கவிதையின் மூலமாகப் புலப்படுத்துகிறார். ஆகவே, பாரதியார் கவிதை வாயிலாக எழுப்பும் உண்மையான மற்றும் நேர்மையான குரலானது பொதுநிலையில் மானிடர்களுக்கும், சிறப்புநிலையில் பெண்ணுரிமைக்கும் முனைப்பாக உள்ளன என்பது வெள்ளிடைமலை.

## பாரதியார் கவிதைகளில் காணப்படும் ஆன்மிகச் சிந்தனைகள்

உலகவாழ் உயிரினங்களைப் படைத்து, அவர்களைக் காத்து அழிக்கும் பரம்பொருளான கடவுளையும், அவற்றிலுள்ள ஆன்மிகச் சிந்தனைகளையும் தமது கவிதைப் படைப்புகளில் புகுத்தியுள்ளார் பாரதி. ஆன்மிகத் தன்மையிலிருந்து பாரதியாரின் இறைபக்தி முற்றிலும் மாறுப்பட்டுள்ளது என்பது அவரின் கவிதையே அதற்கு ஆதாரமாக விளங்குகிறது. பாரதியார் இறைத் தேடலில் தமக்கெனத் தனிப்பாதையை வழிவகுத்துக் கொண்டு மானிடர்களிடையே உண்மையான ஆன்மிக நெறியினைக் கவிதை மூலமாகக் கொண்டு வருகிறார்.

### *இறைவன் ஒருவனே*

இச்சமுகம் ஒன்றாகப் போற்றிய விநாயகர்,சிவன், முருகன், திருமகள், கண்ணன், முத்துமாரியம்மன், புத்தர், இயேசு ஆகிய தெய்வங்களைப் பாரப்பட்சமின்றி தனது படைப்புகளில் பாகுப்பாடின்றி பாடியுள்ளார். இருந்தாலும், பல்வேறு தெய்வங்களை அவர் போற்றினாலும், பாரதியார் பொறுத்தவரையில் இறை ஒன்றே அது பரம்பொருள் என்ற மாறுதலான ஆன்மிகக் கோட்பாட்டினைத் தன்னகத்தே கொண்டுள்ளார். (மன்னார்குடி பானுகுமார், 2018).

"வல்லபெருங் கடவுளிலா அணுவொன் றில்லை,
மஹாசக்தி யில்லாத வஸ்து வில்லை,
அல்லலில்லை அல்லலில்லை அல்ல
லில்லை;அனைத்துமே தெய்வமென்றால் அல்ல லுண்டோ?"

**- (கடவுள் எங்கே இருக்கிறார்? )**

இக்கவிதை வரிகளின் மூலம் அறிவது என்னவென்றால் ஆறுகள் பலதிசைகள் கடந்து சென்றாலும் இறுதியில் ஒரே கடலை கலப்பதைப் போல , உலகில் வெவ்வேறு வகையான சமய நெறிகளின் கோட்பாடுப் பலவற்றதாக இருப்பினும், கடையில் இறைவன் ஒருவனையே சேர்வோம் என்ற உண்மைக் கருத்தினை எடுத்துரைக்கிறார் பாரதி. பிற மதத்தைப் போற்றி வணங்கும் வகையில் முற்போக்குச்சிந்தனையாளராகத் திகழும் பாரதி , ஆன்மிகத்தில் சமய ஒருமைப்பாட்டினைக் கவிதை வாயிலாக உணர்த்தி மக்களிடையே 'ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்' எனும் சமத்துவ நீதியியல் கருத்தினைக் கொண்டு வருகிறார். அதுமட்டுமின்றி, பாரதியார் நாட்டையும் பாரதமாதாவாக்கி இறையாண்மையுடன் வணங்கி தமது விடுதலையுணர்வு கொள்கையினைப் பரப்புகிறார். பாரதியின் நாட்டுப்பற்றுமிகுந்த கவிதைகளில் ஆன்மிக நடை அவ்வப்போது நிழலிடுவதால் சமயப் பற்றுப் பிடியில் ஆழமாக இருப்பவர்கள் அவற்றினை ஏற்கும் மனப்பான்மை கொண்டிருப்பர் என்பது அவரின் எதிர்பார்ப்பு ஆகும். (ம. ப .பெரியசாமித் தூரன், 1981).

## ***இறைவனே கதி : சரணாகதி அடைதல்***

மேலும் , பாரதியார் ஆன்மிகத்தின் உயரிய கொள்கையான சரணாகதி அடையும் ஆன்மிக மேன்மையான தத்துவத்தை அவரின் படைப்புகளில் இணைத்துள்ளார். வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல், எனப்படும் நான்கு பிரிவினைப் பாக்களை கொண்டிருக்கும் கவிதைப் பாடலான 'விநாயகர் நான்மணி மாலை' எனப்படும் சிறு பிரபந்தமே பாடி தமது இறையாண்மையை உணர்த்துகிறார் பாரதி. அதாவது,

"காலைப் பிடித்தேன் கணபதி ! நின்பதம் கண்ணிலொற்றி
நூலைப் பலபல வாகச் சமைத்து நொடிப்பொழுதும்
வேலைத் தவறு நிகழாது நல்ல வினைகள் செய்துன்
கோலை மனமெனும் நாட்டின் நிறுத்தல் குறியெனக்கே".

- **(விநாயகர் நான்மணி மாலை)**

பாரதியார் எழுதிய 'விநாயகர் நான்மணி மாலை' எனும் கவிதைப்பாடலில் யானை முகத்திலான விநாயகர் பெருமானிடம் அவர் முழு மனதுடன் சரணாகதி அடைவதைப் பார்க்கலாம். '*காலைப் பிடித்தேன் கணபதி !* எனும் வரியில் பாரதியார் விநாயகர்

பெருமானின் காலைப் பிடித்துச் சரணமடைவதையும் யானை முகத்தனின் செங்கோல் தம் மனத்தில் அழியாமல் நிலையாக நிறுத்தல் வேண்டும் என்பதை இக்கவிதை வாயிலாக விழைகிறார். அதோடு இல்லாமல், பாரதியாரின் மனத்தில் சிகரமாக இருக்கும் குறிகோள்களை அவனியில் நிலைநிறுத்திட தமக்கு நீண்ட ஆயுள் வேண்டுமென்று சரணடைந்து பக்திரசத்துடன் வேண்டுவதைக் கவிதை வரிகளின் மூலமாகக் கண்டறியலாம். பாரதியாரின் இறையருளும் பண்பு மேம்பாட்டிற்காகவும் பாடியிருக்கும் இக்கவிதை ஆன்மிகப் பக்குவத்தினை மானிடர்களிடையே விரவச் செய்து *'இறைவனே கதி'* எனும் சரணாகதி தத்துவார்த்தத்தை மானிட வாழ்வியலில் விதைக்கச் செய்கிறார். (வெ. பார்வதி ,2017).

அதனைத் தவிர்த்து, நம் முந்தைய தலைமுறையினரான முன்னோர்கள் கடவுளை மனமுருகி வணங்கி ஒருமைப்பாட்டுடன் அமையும் தங்களின் ஆத்ம ஒற்றுமையை அவர்கள் தெரிந்து கொள்ள இடம் உருவாகவேண்டுமென எனக் கருதியதால் மக்கள் கோவிலை வகுத்தார்கள் என்பது பாரதியாரின் கருத்தாகும். சிலை வழிபாடிற்கும் குலதெய்வ வழிபாடிற்கும் எந்தவொரு எதிர்ப்பும் தெரிவிக்காமல் இருக்கும் பாரதியார் காலங்காலமாகப் பின்பற்றி வரும் சிறுதெய்வ வழிப்பாட்டினை மூடப் பக்தி என எதிர்க்கிறார். அதாவது,

> "மாடனைக் காடனை வேடனைப் போற்றி
> மயங்கும் மதியிலிகாள்-எதனூடும் நின்றோங்கும்
> அறிவொன்றே தெய்வம் என்-றோதி யறியீரோ?"
>
> - **(அறிவே தெய்வம்)**

எனும் கவிதைப்பாடலின் மூலமாக மாடன், காடன் எனப்படும் சிறுதெய்வங்கள் வழிப்படுவதை மக்கள் அடியோடு நிறுத்தவேண்டும் எனபதையும் அவ்வகையான ஆன்மிக நம்பிக்கைகள் தீராத பிணியும் வாழ்க்கைச் சிரமத்தையும் தரும் என்பதைப் பாரதி எதிர்க்கிறார். அச்சிறுதெய்வங்களை வழிப்படும்போது ஆடு, கோழிகளைப் பலியிடுவதையும் வன்மையாகக் கண்டித்து *'புலால் மறுத்தல்'* எனும் ஆன்மிகச் சமயக் கோட்பாட்டினைப் புதிய பரிமாண சிந்தனையுடன் கவிதையில் புகுத்துகிறார் முண்டாசு கவி. (ரா.சுராஜ் , 1982).

## *சக்தி தேவியின் பரிணாமம்*

தொடர்ந்து, பாரதியாரின் கவிதைகளில் சக்தி தேவியின் பரிணாமம் பல்வேறு விதமாகக் காட்டப்பட்டிருப்பது அவரின் ஆன்மிக இறைமைநெறி சிந்தனையைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது. *'எல்லாம் சக்தி மாயம்'* என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டு தமது சொந்த ஆன்மிக நடையில் சக்தி தேவியைப் பற்றி பல கவிதைகளை எழுதிப் பெண் சக்தியை மக்களிடையே போற்றத்தக்கவகையில் ஏற்படும்படிச் செய்தார். பாரதியாரைப்

பொறுத்தமாட்டில் அவரின் எல்லாத் தொழிலும் செயல்களும் சக்தி தேவியின் அருளாலும் தாம் கவிச்சிறப்புடன் படைக்கும் கவிதைகள் யாவும் பராசக்தியின் ஆசிர்வாதத்தாலும் நடக்கிறது என்பதை நம்புகிறார். இதைத்தான் பாரதியும்,

"செய்யுங் கவிதை பராசக்தி யாலே
செய்யப்படுங்காண்,
வையத்தைக் காப்பவள் அன்னை சிவசக்தி
வண்மையெல்லாம்
ஐயத்தி லுந்துரி தத்திலுஞ் சிந்தி
யழிவதென்னே! "

- **(விநாயகர் நான்மணி மாலை, கலித்துறை)**

பராசக்தியைத் தமிழ்வாணியாகப் பாவிப்பது அவரின் ஆன்மிகச் சிந்தனையின் உச்சத்தைத் தொடுகிறது. அவரின் ஆன்மிக சிந்தனையில் உதித்த சக்தி வழிப்பாடானது அவரின் மூச்சாகவும் பேச்சாகவும் கவிதைகளில் அருவி நீர் போல் வழிந்தோடுவதால் தனது உடலிடத்தில் உள்ள ஆவியனைத்தையும் சக்தி தேவிக்கே சமர்ப்பிக்கிறார். சக்தி தேவியைக் கவிதைத் திறத்தின் வாயிலாக மனமுருகி வாழ்த்துவதால் இவர் தம்மை 'சக்திதாசன்' என்று கூறிக்கொள்கிறார்.

## *இறைபக்தியின் சிறப்பு*

ஆன்மிகத்தின் உறைவிடமாக விளங்கும் பக்தி நெறியினால் ஏற்படும் நன்மைகளைக் கூட அவர் தமது கவிதை வாயிலாக குறிப்பிட்டுள்ளார். பொதுமை உணர்வின் அடிப்படையில் ஆன்மிகச் சிந்தனையை எடுத்துரைக்கும் பாரதி, தெய்வபக்தியினால் பூலோகம் அடையும் மேன்மைகளை அடுக்கடுக்காய் கவிதைகளில் வெளிக்கொணர்ந்துள்ளார். அவ்வகையில்,

பக்தியினாலே தெய்வ பக்தியினாலே
பக்தியினாலே இந்தப் பாரினில்
எய்திடும் மேன்மைகள் கேளடீ!

- **(பக்தி)**

எனும் கவிதையில் பக்தி ஆற்றுவது மானிடரின் தலையாய கடைமைகளுள் ஒன்று எனப் பாரதி மொழிகிறார். கடவுளின்பால் ஆன்மிகச் சிந்தனையுடன் பக்திநெறியாகத் தொண்டினை ஆற்றுபவர்கள் பிறருக்கு நன்மை செய்யும் மனப்பான்மையைக் கொண்டிருப்பதாகவும் சிந்தனையில் நிலவும் குழப்பங்களும் நீங்கி தெளிவினைப் பெறுபவர்களாகவும் இருப்பார் என்கிறார் பாரதி.

மேலும், ஆன்மிகத்தில் ஈடுபடுவதால் நாம் வாழ்வில் ஒழுக்கம் மற்றும் பண்பு விழுமியங்கள் மேலோங்கி பல அறிவாளர்களின் நட்புப் பெருகும் என பாரதியார் 'பக்தி' எனப்படும் கவிதை வாயிலாக உணர்த்துகிறார். இவ்வாறான, ஆன்மிகப் புரிதலை தமது கவிதைப் படைப்புகளின் மூலம் நிலைநிறுத்தி உண்மையான பக்திநெறியினை உலக வாழ்வின் மேன்மைக்காக ஊடுருவச் செய்து மக்களிடையே மாற்றத்தை நிகழ்த்துகிறார்.

## ***வேதாந்தத் தத்துவம்***

அதனைத் தவிர்த்து, பாரதியார் 'குயில் பாட்டு' எனும் கவிதையின் மூலமாக ஆன்மிகத்தின் உயரிய பொருளாக விளங்கும் வேதாந்தத் தத்துவத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படையாகக் கூறாமல் புதைநிலை கருத்துகளாகச் சமுதாயத்திற்கு எடுத்துரைக்கிறார். ஆன்மிகமும் வேதாந்தக் கருத்துகளைக் குயிலின் கதை முடிந்த பிறகு குயில் பாட்டின் இறுதியில் கவிஞர் மூன்று அடிகளில் ஒரு வினாவை எழுப்புகிறார் பாரதி.

> "ஆன்ற தமிழ்ப் புலவீர் கற்பனையே ஆனாலும்
> வேதாந்தமாக விரித்துப் பொருள் உரைக்க
> யாதானும் சற்றே இடமிருந்தாற் கூறிரோ ! "
>
> - **(குயில் பாட்டு , இறுதி அடிகள்)**

இவ்வினாவே இப்பாட்டில் பாரதியார் சமுதாயத்திற்கு ஓர் உள்ளுறையை வெளிச்சத்திற்குக் கொண்டுவருகிறார் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது. எனவே, இக்கவிதை வரியினை வேதாந்த உள்ளுறை உடையது என்று கருதினர் சிலர் ; வேறு சிலர் இதில் சித்தாந்த உள்ளுறை அமைந்திருப்பதாகக் கூறினர். எவ்வாறாயினும், குயில், மாடு, குரங்கு என்பவற்றைக் குறியீடுகளாகக் கருதும் நிலையில் இப்பாட்டு ஒரு தத்துவ உள்ளுறை உடையதே என்பது புலப்படும். (கு.ராஜவேலு, 2010). காரணம், பாரதி குயில் பாட்டின் கவிதையின் மூலம் மானிடர்களுக்கு இறையருள் கொண்டிருப்பதன் அவசியத்தைத் தத்துவ உள்ளுறையின் மூலமாகவும் வேதாந்தத்தின் அடிப்படையாகவும் புலப்படுத்தியுள்ளார்.

எடுத்துக்காட்டாக, குயிலை இறைவனாகப் பாவித்து, குரங்கையும் மாடையும் மாயையாகப் பாவித்து வாளை அறிவாகப் பாவிக்கும்போது பாரதியார் இச்சமுதாயத்திற்கு வேதாந்த மற்றும் ஆன்மிக அடிப்படையில் பல தத்துவங்களை வழங்குகிறார். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களில் காதலை மாயச் சக்தியாகவும், ஆணவம், கன்மம் என்பவைகளை மாடனும் குரங்கனுமாகப் பாவித்து, குயிலைப் பசுவாக ஆன்மாவாகப் பாவித்து மன்னவன் மகனைப் பதியாகப் பாவித்துப் பொருள்கொள்வதே இதற்குப் பொருத்தமாகும். காரணம், வேதாந்த நெறிப்படி இறைவனும் உயிரும் வேறு வேறு அல்ல.

இரண்டையும் வெவ்வேறு பாணியில் காட்டுவது மாயையின் செயல். பாரதியார் பொறுத்தவரை இக்கால மானிடர்கள் மாயை என்ற சூழ்ச்சியால் சிக்கித்தவித்து வாழ்க்கையின் துன்பக் கடலில் மிதக்கின்றனர். அவர்களுள் ஆணவம், பொறாமை மற்றும் பல எண்ணிலடங்கா தீய எண்ணங்கள் தோன்றி செல்லக் கூடாத பல தீய வழிகளுக்குச் சென்று மாயை உலகத்தில் மாட்டிக்கொள்கிறார்கள். இதனால், இவர்கள் ஆன்மிக இறையருளை பெறுவதில் தடையேற்படுகிறது. (எஸ்.கருணானந்தராஜா, 2010).

குயில் பாட்டில் பாரதியாரும் குயிலும் சேராமல் இருப்பதற்காகக் குரங்கும் மாடும் பல சதிகளைத் தீட்டி அவர்களுக்கு இடையூறாக இருக்கின்றன. ஆனால், குயிலின் முன்பிறப்பு கதையினைக் கேட்டப் பின்னரே பாரதிக்குத் தெளிவு ஏற்பட்டு இறுதியில் குயிலிடம் சேருகின்றார். அதனைப்போல, இக்கால மானிடர்களும் தங்களிடம் இருக்கும் அகந்தையான தீய எண்ணங்களை விட்டொழித்து மனதைச் செம்மையுற்று பக்தியோடு இறைவனின் அருள் பெறுவது சால நன்று என்பதை உணர்த்துகிறார் பாரதி. அதுமட்டுமின்றி, வேதாந்த நெறிப்படி, பாரதியார் *'ஊழ்வினை வந்து உறுத்தும்'* என ஆன்மிகக் கருத்தையும் குயில் பாட்டின் மூலமாக முன் வைக்கிறார். நாம் முன்பிறப்பில் செய்த வினையின் காரணமாக இப்பிறப்பில் துன்பப்பட நேரிடும்; வாழும்போதே மற்றவர்களுக்குத் தீங்கினை விழைவிக்காமல் நல்லதே செய்ய வேண்டும் என்ற ஆன்மிகத்தின் அடிப்படை உள்ளுறையை வெளிபடுத்துகிறார் பாரதி. நல்வினைப் பயத்தால் நன்மைக் கிட்டும் என்பது குயிற்பாட்டின் கவிதையின் வேதாந்த உண்மையாகும். உதாரணமாக, சின்னக்குயிலுக்கும் சேர இளவரசனுக்கும் ஏற்பட்ட காதலுக்கு இடையூறு விளைவித்த மாடன் குரங்கன் அடுத்தப் பிறவியில் பேயராகி உய்வற்ற உயிராகத் திரிகின்றனரே; பேய் நிலையிலும் பேதம் விளைக்க முனைகின்றனரே. ஆனால், கடவுளின் அருளால் குயில் பெண்ணாக மாறி பேயின் ஆளுமையிலிருந்து விடுபடுகிறாள் சின்னக்குயிலி.

ஆகையால், குயில் பாட்டின் வேதச் சார் ஆன்மிகக் கருத்துகள் மூலமாக மீண்டும் பிறவி உண்டு; முந்தைய பிறவியில் செய்த பயனே பிறவிக்குக் காரணம் ; இப்பிறவியில் துன்பம் அனுபவிக்கப்பட்டுப் பலனை அனுபவித்தால் அந்த பிறவி துன்பம் அறுப்படும் என்ற ஆன்மிகச் சித்தாந்தத்தைக் கவிதை எனப்படும் இலக்கிய கோளின் மூலமாக மானிடர் எண்ணங்களின் ஊடுருவச் செய்கிறார். எப்பொழுது நாம் புண்ணிய நற்காரியங்களை இவ்வுலகிற்கு ஆற்றுகிறோமோ, அப்பொழுது நம்முடைய பிறவி துன்பம் அறுப்பட்டு வீடுபேறு அடையலாம் என்ற ஆன்மிகத் தத்துவார்த்தச் சிந்தனையை பாரதி விதந்துரைக்கிறார். இதனால், நம் வாழ்க்கையில் விட்டக் குறை தொட்ட குறை நீங்கின் வீடுபேறு பெறலாம் என்பது ஆன்மிகத்தின் உண்மை நெறியாகும். ஆகவே, பாரதியார் தமது ஆன்மிக இறையாண்மை சிந்தனையின் மூலம் உலகிற்குப் பல புதுமைகளைப் புகட்டி

மானிடர்களின் மேம்பாட்டினை உணர்த்தி பரம்பொருள் ஒன்று அதன் வடிவமே கடவுள் என்பதை ஆழமாக உணர்த்துகிறார்.

## முடிவுரை

இவ்வாய்வின் முடிவாக, பாரதியார் கவிதைகளில் பெரும்பாலானவை ஆன்மிகச் சிந்தனை, பெண்ணியச் சிந்தனை மேலோங்கி விரவிக் கொண்டிருப்பதை மேற்கண்ட கவிதை வரிகளின் எடுத்துக்காட்டின் மூலமாகக் கண்டறியலாம். முண்டாசு கவி ஒருங்கிணைந்த உயர்சிந்தனைத் தொடர்பான பல படைப்புகளைப் படைத்துள்ளது அவரது கவிந்திறத்தின் சிறப்பியல்புகளை எடுத்துரைக்கிறது. மகாகவியின் புதிய பரிணாமச் சிந்தனைகள் அனைத்தும் புதியதை ஏற்கும் சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியின் அடிப்படையில் அமைந்துள்ளன என்பதை மறுக்கவியலாது. தனக்காக மட்டுமில்லாமல் மானுடம் முழுமையும் பயன் நுகர வேண்டும் என்று எண்ணியதால் பரந்துப்பட்ட அன்பின் பொழிவினை வழங்கும் பாரதி மக்களுக்குப் பல சிந்தனைகளைப் பகிர்ந்து மக்களின் நல்வாழ்வினை நிலைநாட்டுகிறார் என்பதை இவ்வாய்வின் மூலம் கண்டறிய முடிகின்றது.

## REFERENCES

Arasu, V. 2001. Feminism and Bharathi. Chennai: Waves Publishing House.
Balasubramanian, C. 1983. *Caṅka kāla makaḷir*. Chennai: Naṟumalar Patippakam, 59.
Chellapan, K. 1984. Bhararthi–The Visionary Humanist. Chennai: Chemmen Publishers.
Ganesan, S. N. 1988. *Pāratiyār maṟumalarcik kaviñar*. Chennai: University of Madras, Dept. of Tamil Literature, 53.
Ilamathi, S. 2004. *Pāratiyin camutāyach cintanaikaḷ*. Chennai: Ulaka Tamiḻārāicci Niṟuvāṉam, 22–31.
Kalpana, P. 2020. *Pāratiyin peṇ viṭutalaik karuttākkam marapum putumaiyum*. Chennai: Tamiḻ Āyvu Kaḷañciyam, 9–41.
Kandasamy, N., et al. 2016. *STPM Tamiḻ moḻi-ilakkiyam (mutal paruvam)*. Kuala Lumpur: International Institute of Tamil Studies.
Karunanandaraja, S. 2010. *Kuyil pāṭṭiṉ tatva rakaciyam*. Chennai: Cultural Centre Publication, Mithra Arts & Creation, 54.
Kulanthaisamy, V. C. 1988. *Bharathu's Scientific Vision*. Chennai: Bharathi Publishing House.
Mannargudi, B. 2018. *Vētāttiriyap pārvaiyil Pāratiyin māṉuṭa cintanaikaḷ*. Chennai: Design Thavam Arts, 9–13.
Nalli, K. Chettiar. 1997. *Tamil Nadu Madhar*. Chennai: Sri Bhuvaneswari Publishing House.
Parvathi, V. 2018. *Māṉuṭa mēmpāṭirkup Pāratiyāriṉ pakti anupavaṅkaḷ*. Kuala Lumpur: *Tamiḻp Pēṟāyvu Āyvitaḻ*, 5(1), 120–124.
Periyasami, T. M. P. 1981. *Pāratiyum kaṭavuḷum*. Chennai: Vanathi Publications, 3–14.
Rajavelu, K. 2010. *Makākavi Pāratiyin Kuyil pāṭṭu*. Chennai: Thiruvaiyaru Bharathi Iyakkam, Bharathi Literary Academy, 22.
Sivamani, K. 2005. *Pāratiyāriṉ Kuyil pāṭṭu nuṇṇāyvu mēyporuḷ viḷakkam*. Thanjavur: Ikkāla Ilakkiyam, Tamil University Publication.
Subburathiyar, N. 1983. *Pāratiyam*. Chennai: Eciyaṉ Accakam, 82–102.
Subburathiyar, N. 1990. *Putuvai (mai) kaviñar Subramania Bharathiar oru kaṇṇōṭṭam*. Chennai: Thenmazhai Publication (First Edition), 15–28.
Subramania, B. 1980. *Kavitaikaḷ*. Chennai: Vaanil Publications.
Subramania Bharathiar. 1941. *Murasu*. Chennai: Bharathi Prasuralayam, 1–10.
Sumathi, T. 2018. *Pāratiyin nīti nūlkaḷil vāḻviyal viḻumiyangkaḷ. Paṉṉāṭṭu Tamiḻiyal Āyvitaḻ*, 3(2), 9–12.
Suraj, R. 1982. *Pārattāy pārvaiyil teyvankaḷ (Pārati pārvaiyil)*. Chennai: Abirami Publications, 32–54.

*பாரதியாரின் கவிதைகளில் காணப்படும் பெண்ணியமும் ஆன்மிகச் சிந்தனைகளும்*

Thangammal, B. 1947. *Pāratiyum kavitaiyum*. Karaikudi: Pudhumai Publications, 36–40.